**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**

**C.C. No. 368/2015**

**வழக்கு சாட்சி – அ.சா.8**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வடிவேலு. | ஜாதி | |
| தந்தை பெயர் / கணவர் பெயர் | ஆறுமுகம். | தொழில் | வங்கியில் வேலை. |
| கிராமம் | நாமக்கல். | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 60/2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.11.2024.

**(1 முதல் 3 எதிரிகள் ஆஜர் இல்லை. அவர்களுக்காக பிரிவு 355 BNSS–ன் கீழ் மனுத் தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது. 4 வது எதிரி ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>சாட்சி மனுவின்பேரில் திரும்ப அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை–</u>**

**<u>4 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

நான் கடந்த 08.04.2013 ஆம் தேதி வழக்கு சம்பந்தப்பட்ட நகைகளை தேனி, ரெப்கோ வங்கியில் ஆய்வு செய்தேன். அந்த தேதி எனக்கு வேலை நாளாகும். தமிழ்நாட்டிள்ள அனைத்து ரெப்கோ வங்கியில் உள்ள நகைகளை வருடம் ஒருமுறை ஆய்வு செய்வது வழக்கம் என்றால் சரிதான். நான் சம்பவ தேதியில் நகை மதிப்பீட்டாளராக பணிபுரிந்து வந்தேன். நான் நகை மதிப்பீட்டாளர் என்பதற்கு இந்திய மத்திய வங்கியால் நோட்டிபிகேசன் வழங்கவில்லை

என்ற எதிரி தரப்பில் கேட்ட கேள்விக்கு சாட்சி என்னை ரெப்கோ வங்கி மேற்படி வேலையைச் செய்யப் பணித்தார்கள். நான் பார்வையிடும்போது, ராஜலெட்சுமி என்ற பெயரில் நகை வைத்து 12 பொட்டலங்கள் இருந்தது. மேற்படி நகைகள் போலியானவை என்று வடிவேலு நாச்சியார், ரமேஸ், செல்வப்பரிமளம் ஆகியோர்கள் எனது விசாரணையில், ஒப்புக்கொண்டதாக நான் போலிசார் விசாரணையின்போது கூறியுள்ளேன். நகைகள் போலியானவை என்று சான்று வழங்கவில்லை. ஆனால் அதுபற்றிய அறிக்கை நான் கொடுத்துள்ளேன். அந்த அறிக்கை சம்பந்தமாக போலிசார் விசாரணையின்போது கூறியுள்ளேன். நான் அறிக்கையை போலிசாரிடம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. தணிக்கை முடிந்தவுடன் கடந்த 08.04.2013 ம் தேதி அன்றே நான் வங்கியில் தணிக்கை செய்தவுடன் அதுபற்றிய அறிக்கையை வங்கியின் மேலாளரிடம் ஒப்படைத்தேன். நான் நகைகளை ஆய்வு செய்வதற்கு உரிய வேதியியல் முறைகளையும் நான் பின்பற்றினேன். போலிசார் விசாரணையின்போது, நான் ஆய்வில் பின்பற்றிய வேதியியல் முறைகளைக் கூறியுள்ளேன். என்னால் நகைகள் போலியானவை என்று கருத்துக்கள் சொல்லமுடியும் என்றாலும், முடிவை சொல்லமுடியாது என்றாலும் சரியல்ல. என்னால் முடிவையும் சொல்லமுடியும். அவ்வாறு முடிவு சொல்லுவதற்கு எனக்கு அதிகாரமில்லை என்றால் சரியல்ல. நான் பி.காம். வரை படித்துள்ளேன். நான் 2012 ஆம் வருடம் நான் சம்பவ வங்கியில் ஆய்வு செய்யவில்லை. 4 ம் எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.